கிறது. பாலே எடுத்துச் செல்லும் கட்டணம் பால் வழங்குவதில் துறமை ஆகிய வற்றைக் கருத்திற்கொண்டு தென் சென்னே மற்ருெரு பால் பண்ணே அமைப்பதற்கு சிறந்த இடமாகக் கருதப்படுகிறது. பால் பண்ணேயை அமைப்பதற்கான இடத்தை விரைவிலேயே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர், சென்னே மாவட்ட ஆட்சியாளர் மற்றும் நிபுணர்களும் சேர்ந்து 9 இடங்களே அதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். அவைகளே, இந்தியப் பால் பண்ணேக் கழகத்தின் நிபுணர்கள் 17—6—71 அன்று பார்வையிட்டிருக்கிருர்கள். வண்டிகளே நிறுத்துவதற்கான வசதிகள், பால் பண்ணேக் கழிவுகளே வெளியேற்ற வசதிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்த இடங்களேத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். விரைவிலேயே இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வேலேகள் துவங்க இருக்கின்றன.

DR. H. V. HANDE: May I know whether there is any programme in Madhavaram area to improve the position?

MR. SPEAKER: The hon. Member must address the Chair.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Is that project going to be started by the Government alone or will there be any joint sector so far as this project is concerned?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அரசுத் துறையிலேயேதான் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலேவரவர்களே, பால் பற்ருக்குறையை நீக்க, கல்கத்தாவிலிருந்து பைப்புகள் மூலமாகப் பால் வரப்போகிறது என்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. அது எந்த நிலேயில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலேவரவர்களே, பம்பாயிலிருந்து கல்கத்தாவிற்கு செல்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். கல்கத்தாவிலிருந்து சென்னேக்கு வரக் கொஞ்சம் நாள் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலேவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

(ஆ) சென்னே நகரிலும் நகரைச்சுற்றியும் பெய்த பெருமழையால் குடிசைவாழ் மக்கள் அல்லல்.

MR. SPEAKER: I have received notice of an adjournment motion from Dr. H.V. Hande under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules to discuss a matter of urgent public importance, namely, the serious situation arising on account of the heavy down-pour of rains in and around the City of Madras and the consequent hardships caused to thousands of people living in the City Slums. I Call upon the Hon. Member to explain briefly as to how this comes under Rule 49.

Dr. H. V. HANDE : Under Rule 42 I have given notice of an adjournment motion the contents of which has just now been mentioned by the hon. Speaker. I would also in this context like to......................

Mr. SPEAKER : Please be brief.

Dr. H. V. HANDE : I will be very brief. I would like to bring to the attention of the House and try to convince the House that this is a matter of urgent public importance. Nearly half a lakh of people have been rendered homeless. This is of course a seasonal problem. But still for another one week or ten days the Assembly may not also meet. So, it is better that some sort of indication is given by the Hon. Chief Minister as to what exactly are the details with regard to the rehabilitation of these half a lakh of people.

A number of houses have been wiped out. Normally the Government gives them Rs. 50 or so. It so happens that the full amount is not given to certain houses. Because the Collector invariably sends his Tahsildar or one of his nominees and very often it so happens that in his report he is not able to give the full details. I do not know what exactly is the reason. After he gives his report. there are many complaints from the persons concerned that this house has been left and that house has been left. I will be very happy that as this is the last day of this session if it is possible for the Hon. Chief Minister to give us an indication as to whether he would be able to give instructions to the officials concerned and see that all the persons whose houses are wiped out are properly assessed and are given the necessary amount.

There is also another problem to which I would like to draw the attention of the Government. A number of people have lost lot of properties in the flood. I want to know whether anything could be done to solve this problem also.

Another problem is this storm water drainage. In a number of places the storm water drainage is not functioning. It is good if it is possible for the Government to immediately send word to the top Corporation Officials and find out whether any Government assistance is required to see that the storm water dranage is properly looked after and whether there is functional deficiency or inefficiency on the part of the Corporation in these places.

Another point to which I would like to draw the attention of the House is this. Usually in Korukkupet the whole area is filled up. There is a railway siding and whenever the houses are submerged they are allowed to stay in two or three compartments. Usually they try to have contact with the railway officials. Two or three years ago we did it. I would like to know whether it is possible to do so now.

A number of areas have been wiped out. In Anna Nagar and in elephant gate behind the police station the whole area has been completely wiped out because of the rains. Of course the Hon. Chief Minister is going to give a statement on that. They are all homeless now and their houses have been completely submerged. They are now victims of the rain. I want to know whether the Government will come forward to give any extra help needed for these persons.

There are nearly 1,200 persons. About 400 persons have been displaced. I want to know whether anything can be done to solve this problem. This is a serious affair in sense that no one can prevent the rains, but once the rains are over, I want to know whether anything can be done to see that they are properly rehabilitated.

For these reasons, I will be very happy if this matter is discussed. Not only people in Madras City, but people outside Madras City are also affected. These problems should be properly discussed and there should be assessment of the financial commitment required by the Government, as this means a lot of financial commitment. All these things can be done, only if the matter is discussed, after adjourning the other business of the House.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர்களே, கடந்த இரண்டு, மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக வட சென்னையில் கொருக்குப்பேட்டை, வியாசர்பாடி, வண்ணாரப்பேட்டை, புளியந்தோப்பு, பெரம்பூர், அய்யனாவரம் போன்ற பகுதிகளும், தென் சென்னையில் தியாகராயநகர், அடையாறு, சைதாப்பேட்டை, மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம், மைலாப்பூரில் சில பகுதிகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் சுமார் 25,000 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வட சென்னையில் சுமார் 300 குடிசைகளும், தென் சென்னையில் சுமார் 1,000 குடிசைகளும் தண்ணீரால் சூழப்பட்டுள்ளன.

இந்தக் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 25,000 நபர்களையும் நேற்று விடுமுறையான 'காரணத்தினால் மாநகராட்சிப் பள்ளிகளில் உடனடியாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பெரும்பாலான மக்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று மாநகராட்சி மன்ற மேயரும், ஆணையரும், குடிசை மாற்று வாரியத் தலைவரும், மற்றும் அதிகாரிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, பார்வையிட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளித்திருக்கிறார்கள். தண்ணீர் தேங்கிய பகுதிகளிலிருந்து தண்ணீரை வெளியேற்றவும், இறைப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டு வேளைகளுக்கும் நேற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இது தொடர்ந்து இன்றும் நடக்கும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1971 அக்டோபர் 25

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டு அவ்வளவு அதிகமாகப் பாதிப்பு ஏற்படவில்லை என்றாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் அதிகாரிகளும், மாநகராட்சி ஆணையரும் ஏற்ற நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுத்து வருகின்றனர் என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டுள்ளவனாக இருக்கிறேன்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பில், வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததன் காரணமாக புதிய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த செல்வக்கனி என்ற சிறிய குழந்தையும், மின்சாரம் தாக்குதலினால் மைலாப்பூரைச் சேர்ந்த 18 வயது முத்து என்ற பையனும் இறந்து விட்டார்கள். மற்றும் மைலாப் பூரைச் சேர்ந்த 6 பேர் சுவர் சரிவின் காரணமாகக் காயமுற்றனர். கால் நடைகளில் இரண்டு எருமைகள் இறந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

மாவட்டங்களில் இந்த மழையினால் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக் கிறது என்பது பற்றிய விவரங்களை உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து சேகரிக்கும்படி ரெவின்யூ இலாகா செயலாளர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார். இதுவரை கிடைத்த தகவல்படி பெரும் சேதம் எதுவுமில்லை என்று தெரிகிறது.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் வெள்ளம் ஏற்படுகிற நேரத் திலும், தீ விபத்து ஏற்படுகிற நேரத்திலும் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்ற மக்கள் குடிசைப் பகுதிகளில் இருக்கிற மக்கள் என்பதை நாம் நன்கு அறி வோம். அந்தக் காரணங்களினால் குடிசைகளையெல்லாம் மாற்றி, நல்ல வீடுகளைக் கட்டிக்கொடுத்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத் தினால், சென்னை நகரத்தில் குடிசை மாற்றுவாரியத்தை அமைத்து அரசு அந்த வாரியத்தின் மூலமாகச் செயல்பட்டு வருகிறது.

சென்னை நகரத்தில் மாத்திரம் குடிசைகள் 602 பகுதிகளில் இருக்கின்றன. இந்த 602 பகுதிகளையும் மாற்றியமைப்பது என்பது இன்று நினைத்து நாளைக்கே முடிக்கின்ற காரியம் அல்ல.

சில இடங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாக இருக்கலாம். அவைகளில் உடனடியாக இந்தக் காரியத்தைச் செய்யமுடியும். சில இடங்கள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான நிலமாக இருக்கும் பொழுது அவர்கள் அதைத் தருவதற்கு, விட்டுக் கொடுப்பதற்கு சம்மதிப் பதில்லை. அவர்கள் பேரம் செய்வதில், அதை எப்படியும் தாங்கள் கையகப் படுத்தவேண்டுமென்ற வகையிலே பாராமுகமாக இருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் அவர்கள் வீடுகளை அமைத்து, குடிசைகளில் வாழ்கின்ற மக்களுக்கு வாடகைக்கு விட்டு, அவர்கள் போட்ட முதலை விட அதிகமாக வசூல் செய்து விடுகிறார்கள். கஷ்டப்படுகின்ற ஏழை எளிய மக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

இந்த நற்காரியத்தை உடனடியாகச் செய்யமுடியவில்லை என்றாலும், இந்த ஆண்டு நான்கு கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 602 குடிசைப் பகுதிகளில், இந்த ஆண்டிலே 75 குடிசைப் பகுதிகளை மாற்றி நல்ல மாடி வீடுகளாகக் கட்டி, குடிசைவாழ் மக்களை குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை குடிசை மாற்று வாரியம் செய்து வருகிறது. பல பகுதிகளில்

வீடுகள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன. இன்னும் பல பகுதிகளில் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டில் அனைத்தும் கட்டி முடிந்துவிடும் நிலையில் இருக்கின்றன.

ஆகவே, இன்னும் நான்கு, ஐந்து ஆண்டு காலத்திற்குள்ளாக குடிசை வாழ் மக்களுக்கு நிரந்தரமான வீடுகளைக் கட்டிக்கொடுத்து, அவர்களை இப்படிப் பட்ட வெள்ளக்கொடுமைகளிலிருந்தும் தீயினால் ஏற்படும் கொடுமைகளி லிருந்தும் காப்பாற்ற இந்த அரசால் நிச்சயமாக முடியும். அதற்காகத்தான் குடிசை மாற்று வாரியம் அவர்கள் விஷயத்திலே தீவிர கவனம் செலுத்துகிறது.

ஏற்கெனவே இருக்கிற குடிசைகளை மாற்றி, நல்ல வீடுகளைக் கட்டி குடி யமர்த்தினால் அவர்கள் நிலை உயரும். மீண்டும் வருகின்றவர்கள் முன் மாதிரியே குடிசைகள் போட்டுக்கொள்ள இது வகைசெய்யும் என்று சில பெரியவர்கள் பத்திரிகையிலே செய்தி வெளியிடுவதைப் பார்த்து நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

புதிதாக நகரில் குடிசைகள் தோன்றக்கூடாது என்பதற்காகத்தான் குடிசைப் பகுதிகளை மாற்றி, புதிதாகத் தோன்றாமல் இருக்க தக்க நட வடிக்கைகளையும் எடுத்து இருக்கிறோம். புதிதாக வருகின்றவர்களும் நல்ல வீடுகளில் வாழ்வதற்காகத்தான் குடிசைமாற்று வாரியம் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, நிரந்தரமான வீடுகளை அமைக்கும் திட்டம் ஏழு ஆண்டு காலத்திற்கு வகுத்திருந்தாலும் குடிசை மாற்று வாரியத் தின் தீவிர முயற்சியால் ஐந்து, ஆறு ஆண்டு காலத்திலே முடிந்துவிடும்.

இருந்தாலும் இப்பொழுது திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது போல் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்க அரசும், மாநகராட்சி மன்ற அதிகாரிகளும் ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து வரு கின்றனர். இன்றைக்கு இந்த விபத்திலே இரண்டு குழந்தைகள்—ஒரு பெண்ணும், ஒரு பையனும்—இறந்திருக்கிறார்கள். ஆறு பேர் காயமுற்றிருக் கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகாரிகள் தக்க நிவாரணப்பணி களை மேற்கொண்ட போதிலும், அதற்காக அரசின் சார்பில் முதலமைச்சரின் நிதியிலிருந்தும் ரூ. 25,000 உதவித் தொகையாக அளிக்கிறேன் என்பதை அறிவித்து, இந்த விளக்கத்திற்குப் பிறகு திரு. ஹாண்டே அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை தீர்ப்பதற்கு அவசியம் இல்லையென்று கருதி, இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(ஆ) பஞ்சாலைகள் போனஸ் தகாராறு குறித்து.

(இ) வருமான வரியை விவசாய வருமான வரியுடன் இணைப்பதற்கு மத்திய அரசின் கருத்து.

MR. SPEAKER : I have received notices of a number of adjournment motions from Thiruvalargal K. T. K. Thangamani, N. Marudhachalam, S. Alagarswamy and Dr. H. V. Hande, regarding disputes in regard to bonus in the various textile mills in the State.